RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s22225

OPEN ACCESS

# சூலக்கரை - வீரப்பெருமாள் கோவில் வழிபாடு

ஜெ. புவனேஸ்வரி [அ, *]

[அ] த தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Sulakarai - Veeraperumal Temple Worship

J. Buvaneswari [a, *]

[a] Research Department of Tamil, National College (Autonomous), Trichy-620001, Tamil Nadu, India

* Corresponding Author: buvi1727@gmail.com

Received: 29.09.2022
Revised: 03-11-2022
Accepted: 07-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Overall this article explains about the reason for the name of the town called Sulakarai, which is the second largest panchayat in Aruppukkottai Union. The most famous temple in Sulakarai is the Veeraperumal temple. People who worship this deity often name their children as Veeraperumal. This article explains in detail how this deity appeared as a clan deity in this town, who built a temple for this deity, how people worship this deity, and the methods of worship that are conducted for this deity.

**Keywords:** Veeraperumal, Temple, Deity, Sulakarai

## முன்னுரை

நாட்டுப்புறத் தெய்வங்கள் "சிறு தெய்வங்கள்" என்று அழைக்கப்படுகின்றன. சிறு தெய்வங்களை வீட்டுத் தெய்வம், குலதெய்வம், ஊர்த் தெய்வம் எனப் பகுக்கலாம். ஓர் ஆணோ அல்லது பெண்ணோ மற்றவரால் கொல்லப்பட்டாலோ அல்லது மற்றவர் தூண்டுதலால் தற்கொலை செய்து இருந்தாலோ அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்களும் இறப்பதற்குக் காரணமாயிருந்த குடும்பத்தினரும் இறந்தவர்களைத் தெய்வமாக நினைத்து வழிபட்டு வருவர். இந்தக் குடும்ப வழிபாடு ஒரு சாதி அல்லது இரண்டு சாதியினருக்கு இடையே இருக்கும். இறந்த தெய்வமானது சக்தி வாய்ந்த தெய்வம் என்று மற்றவர்களால் கூறப்படும் போது குடும்ப வழிபாடானது ஊர் வழிபாடாக மாறும். ஊரில் உள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து கோவில் கட்டி தினசரி பூஜைகள் செய்து வழிபட்டு வரும் போது அது சிறுதெய்வத்திற்குள் அடங்கிவிடும்.

நோய் வந்து இறந்தவர்கள், வீரச் செயலில் இறந்தவர்கள், கன்னிப்பெண்களாக இருந்து இறந்தவர்கள் இவர்களுக்குக் கிராமப்புறங்களில் உயிர்ப்பலி இட்டு வழிபடுவதாலும், பெரும்பாலும் பாமர மக்கள் வழிபடுவதாலும் நிலையான கோவில் அமைப்பும் முறையான பூசையும் இல்லாத காரணத்தினாலும் இவ்வாறு அமைந்த தெய்வத்தைச் சிறு தெய்வம் என்று கூறுகின்றனர்.

காலம் செல்லச் செல்ல சிறுதெய்வ வழிபாடானது கடவுளின் அவதாரம் என்று கூறப்பட்டு பெருந்தெய்வ வழிபாட்டோடு இணைக்கப்படும். பெருந்தெய்வ வழிபாட்டோடு இணைக்கப்படும்போது பலிக்கு இடமிருக்காது. சைவ வழிபாடு மட்டுமே நடத்தப்பெறும்.

மேற்கூறப்பட்ட நாட்டுப்புற ஆய்வுக் கோட்பாட்டின்படி சூலக்கரையில் உள்ள வீரப் பெருமாள் கோவில் ஊர்த் தெய்வமாக இருந்து, சிறு தெய்வமாக வளர்ந்து, முடிவில் பெருந் தெய்வத்தோடு இணைக்கப்பட்ட நிலையை இக்கட்டுரை தெளிவாக விளக்குகிறது.

## சூலக்கரையின் எல்லை

தொடக்க காலத்தில் சூலக்கரை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு உட்பட்டதாய் இருந்தது. இதனைக் "கிழக்கெல்லையாம் கீழக்கரை மேற்கெல்லையாம் சூலக்கரை" என வழங்கி வரும் பழமொழியின் மூலம் அறியலாம்.

இன்றைய சூலக்கரை கிழக்கே குல்லூர் சந்தை கிராமத்தின் நத்தத்தை ஒட்டியும் (கிராமத்தைச் சுற்றியுள்ள அரசாங்கத் தீர்வையற்ற நிலங்கள் நத்தம் எனப்படும்.) வடக்கே மாத்தி நாயக்கன்பட்டிக்குச் செல்லும் சாலையை ஒட்டியும், மேற்கே கன்னியாகுமரி முதல் மதுரை வரை செல்லும் சாலையை ஒட்டியும், தெற்கே மருளூத்து எல்லையை ஒட்டியும் விரிந்து பரந்த சுமார் 930 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் மக்கள் தொகை ஏறத்தாழ 6000 ஆகும்.

சூலக்கரை கிராமமானது அருப்புக்கோட்டை யூனியனில் உள்ள பஞ்சாயத்துக்களில் இரண்டாவது பெரிய பஞ்சாயத்தாகவும், நல்ல வருமானமுள்ள பஞ்சாயத்தாகவும் திகழ்கிறது. இதற்குள், தெற்கூர், நடுவூர், வடக்கூர் (புதுப்பட்டி), மாத்தி நாயக்கன்பட்டி, சூலக்கரை மேடு ஆகிய ஐந்து ஊர்கள் அடங்கியுள்ளன.

## சூலக்கரை பெயர்க்காரணம்

சூலக்கரையைச் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு சாரங்கதாரா என்ற மன்னன் ஆண்டதாக செவிவழிக் கதை உண்டு.

## செவிவழிக்கதை

சாரங்கதாரா மன்னனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். முதல் மனைவியின் ஆண் பிள்ளைக்குச் சுமார் இருபது வயது இருக்கும். அவனை மன்னனின் இரண்டாவது மனைவி விரும்பினாள். ஆனால் கணவன் பார்க்கும் போது தான் நல்லவன் போல் நடித்து அவன் தன்னை கெடுத்து விட்டான் என்று பொய்க் கதையைக் கட்டி முதல் தாரத்து மகன் மீது அரசினிடத்தில் கொலைப்பழியை உண்டாக்கினாள். அவன் செய்த குற்றத்திற்குத் தண்டனையாக சூலக்கரையில் இருந்து சுமார் பத்து மைல் தூரத்திலுள்ள வாழ்வாங்கி என்னுமிடத்தில் அவனைச் சிரச்சேதம் செய்ததாகவும், தன் மகன் மீது இரண்டாவது மனைவி கூறிய பழியைக் கேட்ட முதல் மனைவி வெறுப்படைந்து அப்பகுதி மண்மாரி பெய்யும் படியாக சாபமிட்டதால் சாரங்கதாரா கோட்டை அழிந்ததாகவும் கதை உள்ளது.

முதல் மனைவியினுடைய சாபத்தால் இரண்டாவது மனைவியினுடைய "சூல்" (கரு) கரைந்ததனால் "சூலக்கரை" என்ற பெயர் உருவாகியுள்ளது. அதாவது சாரங்கதாரா மன்னனை வைத்தும் அவர் ஆண்டதற்கான அடையாளங்களை வைத்தும் நோக்கும்போது "சூல்" "கரை" தான் சூலக்கரை என்று மருவியதாகக் கூறுகிறார்கள். (கருத்தையா, நாயக்கர், சூலக்கரை - தெற்கூர், வயது - 79)

## சாரங்கதாரா கோட்டை அழியக் காரணம்

சாரங்கதாரா மன்னனின் கோட்டை அழிந்ததற்கு மற்றுமொரு கதையும் கூறப்படுகிறது. சாரங்கதாரா மன்னன் நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்தவன் என்றும், அவனுக்கு ஒரு மகனும் மன்னனுடைய மந்திரிக்கு ஒரு மகளும் இருந்ததாகக் கூறப்படுகிறது. மந்திரி, மன்னனின் மகனைத் தன் மகளுக்குத் திருமணம் முடித்து வைக்க எண்ணி மன்னனின் மகனிடம் சென்று தன் மகளை மணம் செய்து கொள்ளுமாறு வேண்டியபோது, அவன் தன் பெற்றோரின் முடிவைத் தெரிந்து

கொண்டபின் தங்களிடம் முடிவைக் கூறுகிறேன் என்று கூறியதாகவும், மன்னனின் மகன் தன் எண்ணத்திற்கு உடன்படாத காரணத்தினால் மக்கள் அனைவரிடமும் தன் மகளுக்கும் மன்னனின் மகனுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறி மந்திரி வதந்தியைப் பரப்பியதாகவும் கூறப்படுகிறது.

இச்செய்தி மன்னனின் செவிக்கு எட்டிய மறுநாளே, அரச சபையில் மன்னன் விசாரிக்கும்போது சாட்சிகள் அனைவரும் மந்திரிக்குச் சாதகமாக பொய்சாட்சி கூறிய காரணத்தினால், மன்னனின் மகனை ஊரின் எல்லைக்குக் கொண்டு சென்று வெட்டி எறியுமாறு மன்னன் தீர்ப்பு வழங்கியதாகவும், அத்தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக மன்னனின் மகனைத் தேரில் ஏற்றிக்கொண்டு சென்ற போது தேரானது சூலக்கரை எல்லையைக் கடந்து வாழ்வாங்கி என்னும் ஊருக்குள் சென்றது என்றும், அப்போது மன்னனின் மகன் காவலர்களிடம் அந்த இடத்திலேயே தன்னை வெட்டி எறியும் படியும், தன் தந்தை வழங்கிய தவறான தீர்ப்புக்காக சாரங்கதாரா கோட்டை அழியும் என்றும் சாபமிட்ட காரணத்தினால் மண் மழை பெய்து சாரங்கதாரா கோட்டை அழிந்ததாகவும் அதோடு மந்திரியும் அழிந்ததாகவும் கூறப்படுகிறது. (வீரணன், குயவச்செட்டியார், சூலக்கரை - தெற்கூர், வயது - 75)

## சாரங்கதாரா மன்னன் ஆண்டதற்கான சான்றுகள்

சூலக்கரையில் மிகவும் பழமை வாய்ந்த வீரப்பெருமாள் கோவில் ஒன்று உள்ளது. இக்கோவிலினுள் சாரங்கதாரா மன்னனுக்கும் ராணிக்கும் சிலை செய்து வைத்து இன்றளவும் அவர்களை மக்கள் தெய்வங்களாக வணங்குகின்றனர். இக்கோவிலினுள் இருபது அடி உயரத்தில் ஒரு பூதச்சிலையும் சிவகணமான நந்தியும் உள்ளது. அதனால் இதனைப் பெருமாள் கோவில் அல்ல என்பதை உணர முடிகிறது. வீரப்பெருமான் என்பதே வீரப்பெருமாள் என மருவியிருக்கலாம் எனக் கருதத் தோன்றுகிறது.



சாரங்கதாரா மன்னன், ராணி



அக்னி வீரபத்திரன்

## அக்னி வீரபத்திரன்

இக்கோவில் அமைந்திருக்கும் இடம் செம்மண் பூமி. இதற்கு இரண்டாயிரம் அடிகளுக்கு அப்பால் கரிசல் பூமி உள்ளது. அங்கு யானை, குதிரை கொத்தளங்கள் கட்டிய கற்களும் இடிந்த செம்மண் கோட்டையும் இன்றும் காணப்படுகின்றன. குறிப்பிட்ட இடத்தில் சுமார் 25 அடி தோண்டினால் வெள்ளை நிறக் கற்கள் வருவதும் உண்டு.

## வெள்ளை நிறக் கற்கள் இருப்பதற்குக் காரணம்

சாரங்கதாரா மன்னன் தன் மகனுக்கு நீதி தவறி கொடுத்த தண்டனையாலும், முதல் மனைவி கொடுத்த சாபத்தாலும், மண்மாரி பெய்து பூமி கொதித்ததாலும் பூமிக்கு அடியில் உள்ள கற்கள் வெள்ளை நிறக் கற்களாக மாறி விட்டன என்று பெரியோர்களால் கூறப்படுகிறது. (கருத்தையா, நாயக்கர், சூலக்கரை, வயது - 79)

சாரங்கதாரா மன்னன் ஆண்ட போது வீரப்பெருமாள் கோவிலிலிருந்து சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் புளியங்குளம், செட்டிபட்டி, கல்மார்பட்டி, கடம்பன்குளம் ஆகிய ஊர்கள் இருந்தன. ஆனால் இன்று அவ்வூர்கள் இல்லை. அவ்வூர்கள் இருந்ததற்கான அடையாளங்கள் இன்றும் காணப்படுகின்றன.

சூலக்கரை மேட்டிற்கு மேற்கே தாதம்பட்டிக்குச் செல்லும் பாதையில் முதுமக்கள் தாழி இருந்ததற்கான அடையாளங்கள் உண்டு. இன்றும் அம்மண்ணைத் தோண்டினால் முதுமக்கள் தாழிகள் கிடைத்த வண்ணம் உள்ளன. வீரப்பெருமாள் கோவில் அமைந்துள்ள இடமும், மேற்குப் பகுதியில் கிடைக்கும் முதுமக்கள் தாழியும், செம்மண் கோட்டையும், சுமார் பத்து அடிகளுக்குக் கீழே உள்ள சுண்ணாம்புக் கல் போன்ற அமைப்புகளும், சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் நான்கு ஊர்கள் இருந்ததற்கான அடையாளங்களும் சாரங்கதாரா மன்னன் ஆண்ட செய்தியை மெய்ப்பிப்பனவாய் உள்ளன.

## வீரப்பெருமாள் கோவில் அமைப்பு

சூலக்கரையில் உள்ள தெற்கு ஊரின் மையப்பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்ற கோயிலாக இருப்பது வீரப்பெருமாள் கோவில். இக்கோவிலினுள் இருபத்தொரு தெய்வங்கள் இடம்பெற்றுள்ளன. "இருபத்தொரு தெய்வங்களை 'இருபத்தொரு பந்தி' என்று அழைக்கின்றனர்." (முனைவர் பழ. அன்பு மீனாள், முனைவர் சு. முத்துஇலக்குமி, முனைவர் ஜே. அ. ஜாஸ்மின் கமலவதினி, 2004, இலக்கியத் தரவுகளில் மகளிர் பதிவுகள், ப - 144)

## இருபத்தொரு தெய்வங்கள்

வீரப்பெருமாள், அவ்வம்மாள், பாவம்மாள், சங்கிலி கருப்பசாமி, கொலைகாரி நாகம்மா, சன்னாசி, பேச்சி, ராக்காயி, குதிரை, சாரங்கதாரா ராஜா, ராணி, அக்னி வீரபத்திரன், ஒன்பது கன்னிமார் பெண்கள்.

வீரப்பெருமாள், அவ்வம்மாள், பாவம்மாள், குதிரை, சாரங்கதாரா ராஜா, ராணி, அக்னி வீரபத்திரன் போன்ற தெய்வங்களுக்கு உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சங்கிலி கருப்பசாமி, சன்னாசி, ராக்காயி, பேச்சி, முதலிய தெய்வங்களுக்குப் பீடங்கள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன.

"தெய்வங்கள் பந்தியாக அமைந்த கோவில்களில் முக்கியமான ஒன்றிரண்டு உருவங்களாகவும் பிற தெய்வங்கள் பீடங்களாகவும் வழிபடப்படுகின்றன." (Paramasivan, 1995)

கன்னிமார் பெண்கள் எனப்படுபவை நிலையான உருவமோ, வழிபாடோ கொண்டவை அன்று. ஒரு வருடம் அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை புரட்டாசி மாதம் விழா நடைபெறும். மூன்று நாட்களுக்கு முன்பு பெண் வடிவில் ஒன்பது சிலைகளைச் செய்து திருவிழாவன்று கோவிலுக்குள் வைத்து சிறப்புப் பூஜை நடத்தி படையல்கள் படைத்து வழிபடுகின்றனர். வழிபாடு முடிந்த பிறகு சிலைகளை உடைத்து விடுகின்றனர்.

"பொதுவாக நாட்டார் தெய்வங்கள் பல இணைந்து ஒரு தொகுதியாகவே காணப்படும். மதுரை, ராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களில் குறிப்பிடப்படுகின்ற இருபத்தோரு தெய்வ எண்ணிக்கைகள் வேறுபடுகின்றன. அவற்றுள் பேச்சி, ராக்காயி, ஏழு கன்னிமார், பத்ரகாளி, இருளாயி, பகவதி ஆகிய பெண் தெய்வங்களும் விநாயகர், சுப்பிரமணியன், வீரபத்திரன், சோணை, சப்பாணி, கருப்பண்ணசாமி, வைரவர், சங்கிலி, மகாமுனி, லாடசன்னாசி, குருநாதசாமி ஆகிய ஆண் தெய்வங்களும் அடங்கும்." (Lourdu, 2000)

வீரப்பெருமாள் தெய்வமானது வடக்கு பார்த்த முகமாக அமைந்துள்ளது. "ஆண் தெய்வங்கள் கிழக்கு நோக்கியே அமைவது மரபாகும்." (Paramasivan, 1995) ஆனால் அம்மரபுக்கு மாறாக வீரப் பெருமாள் சிலை வடதிசை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. கருவறைக்குள் வீரப்பெருமாள், அவ்வம்மாள், பாவம்மாள் முதலிய தெய்வங்களின் சிலைகள் உள்ளன. கருவறையை ஒட்டி

அமைந்துள்ள சுற்றுப்பிரகாரத்தில் கொலைகாரி நாகம்மா, பேச்சி, ராக்காயி முதலான பதினெட்டு தெய்வச் சிலைகள் அமைந்துள்ளன.



வீரப்பெருமாள் - அவ்வம்மாள் - பாவம்மாள்

வீரப்பெருமாள் கோவிலின் முன் பெரிய கிணறு ஒன்று உள்ளது. அக்கிணற்றில் எந்த கோடைகாலத்திலும் 12 அடி அளவில் தண்ணீர் மட்டம் வற்றாமல் உள்ளது.

## வீரப்பெருமாள் கோவில் வரலாறு

சாரங்கதாரா மன்னன் ஆண்ட காலத்தில் வீரப்பெருமாள், அவ்வம்மாள், பாவம்மாள் என்ற மூவரும் சூலக்கரையில் வசித்து வந்தனர். இவர்கள் நாயக்கர் சமூகத்தைச் சார்ந்தவர்கள். வீரப்பெருமாளின் அக்கா - அவ்வம்மாள், தங்கை - பாவம்மாள். அவ்வம்மாள், பாவம்மாள் இருவரும் இணைபிரியாத சகோதரிகளாய் மிகுந்த பாசத்தோடு வளர்ந்து வந்தனர். கன்னிப் பருவம் எய்திய பிறகு திருமணத்தின் மூலம் இருவரும் பிரிந்து விடக் கூடும் என்று எண்ணி கலங்கினர். இருவரும் பிரியாமல் இருக்க வேண்டும் என்று எண்ணி தன் சகோதரனான வீரப்பெருமாளிடம் சென்று தங்கள் இருவரையும் ஒருவருக்கே மணமுடித்து வைக்குமாறு வேண்டினர். வீரப்பெருமாள் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஊராரும் இவ்விரு பெண்களிடமும் அவர்கள் எடுத்திருக்கும் முடிவு தவறானது என்பதை எடுத்துக் கூறினர். ஆனால் இருவரும் தங்கள் முடிவில் உறுதியாக இருந்தனர்.

அவ்வம்மாள், பாவம்மாள் இருவரும் தங்கள் எண்ணத்தை நிறைவேற்ற மறுத்த வீரப்பெருமாள் மீது கோபம் கொண்டு சூலக்கரையை விட்டு வெளியேறி சங்கரலிங்க புரத்திற்கு அருகிலுள்ள கோவில்பட்டிக்குச் சென்றனர். அந்த ஊரிலேயே இருவரும் தீ வளர்த்து அதனுள் இறங்கி உயிர் நீத்தனர்.

சகோதரிகளின் இறப்புச் செய்தியைக் கேட்ட வீரப்பெருமாள் தானாகவே உயிர்விட்டார். உயிர்நீத்த வீரப்பெருமாள் சாரங்கதாரா மன்னனுடைய கனவில் சென்று தனக்குக் கோவில் கட்டி வழிபட்டு வந்தால் ஊரில் பல நன்மைகள் நடைபெறும் என்று கூறிய காரணத்தால் சாரங்கதாரா மன்னன் வீரப்பெருமாளுக்குக் கோவில் கட்டி வழிபட்டு வந்தார்.

வீரப்பெருமாளின் சகோதரிகளான அவ்வம்மாளும், பாவம்மாளும், கோவில்பட்டிக்குச் சென்று தீக்குளித்து இறந்ததால் அங்கு இருவருக்கும் பீடம் அமைத்து நாயக்கர்கள் சிறப்பான முறையில் வழிபட்டு வருகின்றனர். "சைவ, வைணவத் தெய்வங்களோடு நாட்டார் தெய்வங்கள் இணைக்கப்படும் படிமுறையையும் காணமுடிகிறது. குடும்பத்தைச் சார்ந்த பெண் தீப்பாய்ந்து இறந்தால் அது தீப்பாய்ந்த அம்மன் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது." (Lourdu, 2000)

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை அவ்வம்மாளுக்கும், பாவம்மாளுக்கும் விழா எடுக்கும் போது கோவில்பட்டியில் உள்ளோர் முதல் நாள் காலையில் சூலக்கரைக்கு வந்து வீரப்பெருமாளை வழிபட்டு பொங்கல் வைத்து, தங்களுடைய நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிய பின்னர் மாலை வேளையில்

தங்கள் ஊருக்குச் சென்று அவ்வம்மாளுக்கும் பாவம்மாளுக்கும் விழா கொண்டாடுகின்றனர். (வீரணன், குயவச்செட்டியார், சூலக்கரை - தெற்கூர், வயது - 75)

## வீரப்பெருமாள் கோவில் வழிபாடு

சூலக்கரையில் உள்ள வீரப்பெருமாள் கோவிலில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடு நடத்தப் பெறுகின்றது.

ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாதம் மூன்றாம் செவ்வாய்க் கிழமை சாட்டுதல் நடைபெற்று நான்காம் செவ்வாயன்று பொங்கல் கொண்டாடப் பெறுகின்றது.

தைப்பொங்கல் அன்று வீரப்பெருமாளுக்குப் புதுப்பட்டு கட்டி பொங்கல் வைத்து சிறப்புப் பூஜை செய்கின்றனர்.

மாசி மாதம் சிவராத்திரியன்று வெவ்வேறு ஊர்களில் இருந்தும் மக்கள் வந்து மொட்டை அடித்தல், கிடா வெட்டுதல் முதலிய நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி பொங்கல் வைக்கின்றனர். "சிறுதெய்வக் கோவில்களில் மாசி மாதம் மகா சிவராத்திரியன்று நடைபெறும் திருவிழாக்களை மாசிக் களரி என்பர்." (Paramasivan, 1995)

சிவராத்திரியன்று கோவில் அலங்கரிக்கப்பட்டு வீரப்பெருமாளுக்குச் சிறப்புப் பூஜைகள் செய்யப்பட்டு அவல், பொரிகடலை, சர்க்கரை, கல்கண்டு, பழம், பொங்கல் முதலான படையல் பொருட்கள் படைக்கப்படுகின்றன.

வீரப்பெருமாள் தெய்வத்திற்குப் பலி கிடையாது. வழிபாடு மட்டுமே நடத்தப்பெறுகின்றது. வீரப்பெருமாளின் காவல் தெய்வமான அக்னி வீரபத்திரனுக்கு அசைவப்பலி கொடுக்கப்படும்போது வீரப்பெருமாளின் சன்னதிக்குத் திரையிடப்படுகிறது.

திருவிழா நாட்களில் மட்டுமன்றி பக்தர்கள் எல்லா மாதங்களிலும் இக்கோவிலுக்கு வந்து பொங்கல் வைத்தும், பலியிட்டும், சிறப்புப் பூஜை நடத்தியும் தம் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுகின்றனர்.

"நாட்டுப்புற மக்கள் தம் வாழ்வில் ஏற்படும் கவலைகளுக்கும், நோய்களுக்கும் நாட்டுப்புறத் தெய்வங்களையே தஞ்சமடைகின்றனர். படையல்களும், பலியும் இட்டுத் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்கின்றனர்." (Chandarasekaran & Sanmugam, 2002)

## முடிவுரை

நாட்டார் தெய்வ உருவாக்கம் மக்களைக் காக்கும் தன்மையுடன் உருவாக்கப்பட்டது. நாட்டார் தெய்வ வழிபாட்டின் அடிப்படை நம்பிக்கையே. மக்களின் வாழ்க்கையில் பிரிக்க முடியாத கூறாக, ஆழமாக வேரூன்றிப் பரவியுள்ள இந்தத் தெய்வ வழிபாடுகளும், விழாக்களும் நாட்டுப்புறப் பண்பாட்டைக் கட்டமைப்பதிலும், மனித சமூகத்தை ஒருங்கிணைத்து நெறிப்படுத்துவதிலும் முக்கியத்துவம் பெறுகின்றன. வழிபாடும் விழாக்களும் மக்களிடையே பக்தியுணர்வைப் பெருக்கி நல்லொழுக்கத்தை வளர்க்கின்றன.

## References


Chandarasekaran, R., Sanmugam, V. (2002) Nattupura Valipattu Marabukal, Bharathiar Noolagam, Coimbatore, India.

Lourdu, D. (2000) Nattar Valakatriyal, Nattar Valakatriyal Aivu Maiyam, Palayamkottai, India

Paramasivan, T. (1995) Theivangalum Samuga Marabukalum, New Century Book House, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License